2025 ஆகஸ்ட் மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 67 /2022

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 – ஆம் தேதி புதன்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW1 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – சுருளிக்குமார் |
| தகப்பனார் பெயர்: | நாகையா |
| ஊர்: | தேனி–அல்லிநகரம் |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலி வேலை |
| வயது : | 44 |

தேதி : 20.08.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1. | 21.01.2022ம் தேதியிட்டு தேனி காவல்நிலைய குற்ற எண்.29/2022 பிரிவுகள் 279, 337 இ.த.ச.ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் இணையதள நகல் – **ம.சா.ஆ.1.** |

| | |
|---|---|
| 2. | 04.02.2022 ம் தேதியிட்டு எனது அம்மா தமிழரசி என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு இணையதள நகல் – **ம.சா.ஆ.2.** |
| 3. | 01.03.2022 ம் தேதியிட்டு தேனி காவல்நிலைய குற்ற எண்.29/2022 பிரிவுகள் 279, 337 இ.த.ச.ன்படி தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை இணையதள நகல் – **ம.சா.ஆ.3.** |
| 4. | 21.01.2022 ம் தேதியிட்டு தேனி காவல்நிலைய குற்ற எண்.29/2022 பிரிவுகள் 279, 337 இ.த.ச.ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பார்வை மகஜர் இணையதள நகல் – **ம.சா.ஆ.4.** |
| 5. | 21.01.2022 ம் தேதியிட்டு தேனி காவல்நிலைய குற்ற எண்.29/2022 பிரிவுகள் 279, 337 இ.த.ச.ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் இணையதள நகல் – **ம.சா.ஆ.5.** |
| 6. | 27.01.2022 ம் தேதியிட்டு விபத்தில் சம்பந்தப்பட்ட TN 60 AE 0136 என்ற இருச்சக்கர வாகனத்திற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை இணையதள நகல் – **ம.சா.ஆ.6.** |
| 7. | 09.11.2022 ம் தேதியிட்டு 1 ம் எதிர்மனுதாரர் தேனி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற S.T.C.No.2139/2022 வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியதற்கான உத்தரவு இணையதள நகல் – **ம.சா.ஆ.7.** |
| 8. | 01.01.2022 ம் தேதியிட்டு எனது அம்மா தமிழரசி மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான மருத்துவ விடுவிப்பு சான்று ஒளிப்பதிவு நகல் – **ம.சா.ஆ.8.** |
| 9. | 21.01.2022, 24.02.2022 ஆகிய தேதிகளில் எனது தாயார் சிகிச்சை எடுத்ததற்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் (8 எண்ணம்) அசல் மொத்த தொகை ரூ.7,253/– க்கானது – **ம.சா.ஆ.9.** |
| 10. | 07.03.2022 ம் தேதியிட்டு எனது தாயார் தமிழரசி 27.02.2022 ம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்பு சான்று இணையதள நகல் – **ம.சா.ஆ.10.** |
| 11. | 15.03.2022 ம் தேதியிட்டு இறந்துபோன எனது தாயாருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் இணையதள நகல் – **ம.சா.ஆ.11.** |
| 12. | எனது அக்கா சுமதி என்பவரின் ஆதார் அடையாள அட்டை ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிப்பார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). – **ம.சா.ஆ.12.** |
| 13. | எனது ஆதார் அடையாள அட்டை ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிப்பார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). – **ம.சா.ஆ.13.** |
| 14. | எனது தங்கை தனலட்சுமி என்பவரின் ஆதார் அடையாள அட்டை ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிப்பார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). – **ம.சா.ஆ.14.** |

மனுதாரர் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.08.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.20 18:29:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC). தேனி.
20.08.2025